# <u>சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்</u>

அசல் வழக்கு எண்.342/2024

நாள்: 08.09.2026

பி.வா.சா. 1– தங்கப்பன்

2026–ம் ஆண்டு செப்டம்பர் 08–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தனஞ்செயன், கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நானும், ராஜாதிருசங்கம் என்பவரும் சகோதரர்கள் என்றால் சரிதான். 01.11.1982–ல் பதிவு செய்யப்பட்ட பாக அட்டவணை ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு எதிராக ஜெயங்கொண்டம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.143/2012 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் பூர்வீக மனைக்கட்டையும், 2 மற்றும் 3 வாதிகள் பெயரில் பெற்ற கிரய சொத்துகளையும் சேர்த்து தான் வழக்கு தொடர்ந்தேன் என்றால் சரியல்ல. ஜெயங்கொண்டம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.143/2012 என்ற வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.143/2012 என்ற வழக்கை பொறுத்து மேல்முறையீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். அதற்கான மேல் முறையீட்டு எண்.8/2024 என்றால் சரிதான். 01.11.1982–ல் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் விவசாய நிலத்தையும் சேர்த்து பாகம் பிரித்துக்கொண்டோமா என்றால் இல்லை. வாதிகள் பூர்வீக மனைக்கட்டு, பூர்வீக விளைநிலங்கள், 2, 3 வாதிகள் பெயரில் பெற்ற கிரயச் சொத்துகள் ஆகிய அனைத்திற்கும் ஜெயங்கொண்டம் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.323/2012 என்ற எண்ணில்

வழக்கு தொடர்ந்தார்களா என்றால் சரிதான். பூர்வீக சொத்துகளுக்கு வழக்கு போடவில்லை. என் தந்தை வாங்கிய கிரய சொத்துகளுக்கு மட்டும் நான் மேல் முறையீடு செய்தேன். அசல் வழக்கு எண்.143/2012–ல் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு ஆதரவாக வழங்கப்பட்டதால் வாதிகள் மேற்படி சொத்துகள் பொறுத்து சுவாதீனம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரியல்ல. மீதமுள்ள விலைநிலங்களை வாதிகள் அனுபவிப்பதாக வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரியல்ல. 1982–ஆம் ஆண்டு பாக அட்டவணை விலைநிலங்களை பொறுத்து சுவாதீன பரிகாரம் இல்லாத விளம்புகை நிலைக்கதக்கதல்ல என்று அசல் வழக்கு எண்.323/2012 வழக்கில் தீர்ப்பு ஏற்பட்டது என்றால் சரிதான். வாதிகள் தாக்கல் செய்த ஆவணங்கள் சரியில்லை என்று அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. தாவா சொத்துகள் எனது அண்ணன் ராஜாதிருசங்கம் பாக சொத்துகள் என்றால் சரியல்ல. எனது தந்தை பெயரில் பூர்விக நிலங்கள் கிடையாது. எனது தாயார் பெயரில் 1/2 காணி பூர்வீக நிலம் இருந்தது. எனக்கு தற்போது 3 ஏக்கர் நிலம் உள்ளது. எனது பெயரில் தனிப்பட்ட கிரயமாக 1 ஏக்கர் உள்ளது. எனது மகன்கள் பெயரில் எத்தனை ஏக்கர் உள்ளது என்றால் தெரியாது. எனது அண்ணன் உயிருடன் இருக்கும்வரை அவரிடம் இருந்து பல வழிகளில் ஆதாயம் அடைந்துக்கொண்டு தற்போது அவரின் வாரிசுகளிடம் இருந்து சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்பட்டு வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வாதிகளை ஊருக்கு வராமல் விரட்டி அடிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் வெளிமாநிலத்தில் வசித்து வருவதை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு வாதிகளிடம் இருந்து சொத்துகளை அபகரிக்க முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துகளும் மற்ற கிரய சொத்துகளும் வாதிகளுக்கு சொந்தம் என்று தெரிந்தே பொய்யாக கட்சி செய்கிறேன்

என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் எனது அனுபவம் சட்ட விரோதமானது என்றால் சரியல்ல. 1982 தேதிய பாக அட்டவணையை இரத்து செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில் என்னுடைய எதிர்வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதில்லை என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2,
ஜெயங்கொண்டம்.